செய்தி வெளியீடு எண். 148 நாள் : 13.03.2017

**திருவவ்ளுர் மாவட்டத்தில், விவசாயிகள் ஏரிகளில் வண்டல்மண்ணை அனுமதியுடன் விவசாயத்திற்காக எடுத்துக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ. சுந்தரவல்லி, இ,ஆ,ப., அவர்கள் தகவல்.**

~~~~~~~~~

திருவவ்ளுர் மாவட்டத்தில், அரசு ஆணை எண். 233 தொழிற் (எம்எம்சி-2) துறை, நாள் 23.09.2015ன்படியும், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிம சலுகை விதிகளின் விதி 12(2)ன்படியும், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஏரிகளில் வண்டல் மண் மற்றும் சவுடுமண் ஆகியவற்றை கட்டணமில்லாமல் பொதுமக்கள் வீட்டு பயனுக்காக மற்றும் வேளாண் நோக்கத்திற்காக 30 கனமீட்டர் அல்லது 5 லாரி லோடு அளவு வரை கனிமம் வெட்டி எடுத்துக்கொள்ள அனுமதி வழங்குவது குறித்து, திருவள்ளுர் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியீடு எண்.4 நாள், 07.03.2017ன்படி மாவட்ட ஆட்சியர் அறிவிக்கையில் கண்டுள்ள பொதுப்பணித்துறை ஏரிகளில் மட்டும் அதில் தெரிவித்துள்ள நிபந்தனைகளின்படி விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது. அதன்படி, அனுமதி கோரும் மனுதாரர்கள் கீழ்க்கண்ட ஆவணங்களுடன் திருவள்ளுர் மாவட்ட ஆட்சியரகத்தில் மனு செய்து கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

- விவசாய நிலம் / வீட்டு மனை தொடர்பாக பட்டா மற்றும் சிட்டா நகல்.
- கனிமம் எடுத்துச்செல்ல பயன்படுத்த உள்ள வாகன பதிவு எண்கள் குறித்த விவரம்.
- அனுமதி கோரும் நோக்கம் தொடர்பாக சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலரின் சான்று.
- குடும்ப அட்டை / ஆதார் அட்டை / வாக்காளர் அடையாள அட்டை நகலகளை வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தெவிக்கிறார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்**
~~~~~~~~~